**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**O.S.No.44/2017**

**சாட்சியின் சான்றுரை DW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | ராமலிங்கம் | வட்டம் | - | |
| த/பெ | - | சுப்பிரமணியம் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

13.07.2023 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி என்னால் உறுதிமொழி கொடுத்து சாட்சியமளிக்கப்பட்டது.
பிரதிவாதி சாட்சி 1 வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

நான் ஏற்கனவே சொன்னது போல் மாவட்ட தொழில் மையத்தின் கடை வைப்பதற்காக எனக்கு வழங்கப்பட்ட ஆவணம் சொத்தை நிரூபிக்ககூடிய ஆவணம் இல்லை என்றால் சரிதான். 7,8 ஆவணங்கள் படி நான் மாவட்ட தொழில் மையத்தின் மூலம் அனுமதி பெற்று செய்த தொழிலுக்காக மின்சார வாரியத்தில் மின் இணைப்பு பெற்றதற்கு அரசாங்கத்தில் வழங்கக்கூடிய மானியத்திற்குரிய ஆவணம் என்றால் சரிதான். மின்சார இணைப்பு நான் டிகிரி நகலை வைத்து தான் வாங்கினேன். 9வது ஆவணம் தீர்வை ரசீது போட்டுள்ளேன் என்றும் அதில் 2வது ரசீதுக்கும் வழக்கு நடக்கும் சொத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் சரிதான். 2019,2020,2021 வருடங்களில் வாய்தா ரசீதுகள் வாங்கிபோட்டுள்ளேன் என்றும் அது வழக்கிற்கு பிறகு வாங்கப்பட்டது என்றால் சரிதான். அதன் வாய்தாவை நான் தான் கட்டி வருகிறேன். அது வழக்கிற்கு முன்பும் நான் தான் கட்டி வருகிறேன். பிவாசாஆ10 என்பது

கோலியனூர் பஞ்சாயத்து சாலைஅகரம் கிராமத்தில் வாங்கப்பட்ட பல்வகை ரசீது என்றும் அது வழக்கிற்கு பின் ஏற்பட்டது என்றால் சரிதான். பிசா.ஆ11 மின்இணைப்பு அட்டை வழக்கு தாக்கல் செய்வதற்கு பின்னிட்டு வாங்கப்பட்ட ஆவணம் என்றால் இல்லை நான் 2011க்கு முன்பே கட்டி வருகிறேன். வழக்கிற்கு பின்னிட்டு தான் வாங்கினேன் என்றால் சரியல்ல. தாவா இடத்திற்கு பக்கத்தில் சொக்கலிங்கம் இடம் ன்னறால் இல்லை. மானிய இடம் உள்ளது. அது வக்கீல் இடம். அதற்கு பக்கத்தில் பலராமன் நிலமாகும். அதற்கு மேற்கு புறத்தில் தான் சொக்கலிங்கம் இடம் உள்ளது. சொத்து இடம் மாரியம்மன் கோவில் மானியத்திற்கு வடக்கில் உள்ளது. பாலராமன் நிலத்திற்கு கிழக்கில் உள்ளது. பாண்டி போகும் ரோட்டிற்கு தெற்கில் உள்ளது. சொக்கலிங்கத்திற்கும் எங்க ளுக்கும் பிரச்சனை எதுவும் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் வழக்கு நடந்துக்கொண்டிருக்கும் போது நீதிமன்றத்தில் கட்டிடம் கட்டக்கூடாது என்று உத்தரவு போடப்பட்டது என்றால் நான் 2011ல் கட்டிடம் கட்டினேன். 2017ல் நான் கட்டிடம் கட்டினேனா என்றால் இல்லை. என் தம்பி கருணாநிதி என்கிற கர்ணன். தான் கட்டினார். கட்டி முடித்துவிட்டார். அதுபோல் மேற்கொண்டு கட்டக்கூடாது என்று நீதிமன்றத்ததில் உத்திரவு போட்டார்கள் என்றால் அவ்வாறு எங்க ளுக்கு உத்தரவு எதுவும் கொடுக்கவில்லை. காவல் நிலையத்தில் நீதிமன்றத்தின் உத்தரவு உள்ளது என்று காட்டியபிறகு நான் கட்டிடம் கட்டமாட்டேன் என்று எழுதி கொடுத்துவிட்டு மறுநாள் கட்டிடத்தை கட்டி முடித்துவிட்டே என்றால் சரியல்ல. எங்கள் 3 பேர் பெயரிலும் வளவனூர் காவல் நிலையத்தில் புகா ் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அங்கு தான் நான் சென்று கட்டிடம் கட்டமாட்டேன் என்று எழுதிகொடுத்தேன்எ ன்றால் சரியல்ல. அவர்கள் தான் எங்க ளுக்கு டிகிரி

நகல் உள்ளது. கட்டலாம் என்று சொன்னார்கள். அவ்வாறு எழுதிகொடுத்தது என்னிடம் உள்ளது. அதை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. டிகிரி என்பது 1977ல் போடப்பட்ட வழக்கில் போட்டதாகும். அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு டிகிரி எதுவும் இல்லை என்றும் அவ்வாறு கொடுத்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சபாபதி ஆச்சாரி பெயரில் 1896ல் வாங்கிய கிரையம் தான் இந்த வழக்கு சொத்து என்றால் சரிதான். 1 முதல் 8 பிரதிவாதிகள் தெரியாது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தெரியும் பவுனாம்பாளை தெரியாது. பவுனாம்பாள் தான் 1 முதல் 8 பிரதிவாதிகள் பெயரில் பாகம் பிரித்துக்கொடு என்று வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். வாதியும் 1 முதல் 8 பிரதிவாதிகளும் அவர்களுக்குள் பாகம் பிரித்துக்கொள்வதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் எதிர்கோர்உரிமை கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. ஆனால் பவுனாம்பாள் அண்ணன்மார்கள் தான் எனக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். சாமாதி இருப்பதால் தான் உரிமை என்று சொல்கிறேன் என்றால் இல்லை 1932ல் என் தந்தையார் சுப்பிரமணிய ஆச்சாரியார் கிரையம் வாங்கியதால் எனக்கு உரிமை என்று வழக்காடுகிறேன். சபாபதி ஆச்சாரியின் அண்ணன் தான் வேலாயுதம் அச்சாாரி அவர் தான் அந்த சொத்தை வாங்கினார். வழக்கு போடுவதற்கு முன்பு 1932ல் 3ல் 1 பாகத்தை வேலாயுத ஆச்சாரிக்கு சபாபதி ஆச்சாரி எழுதி கொடுத்துள்ளார். அந்த ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். அவ்வாறான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் இல்லை என்றால் தவறு. எனது வாக்குமூலத்தில் 4 சென்ட் எனக்கு உரிமை என்று சொல்லியுள்ளேன் என்றும் சொத்து முழுவதும் உரிமை என்று

சொல்கிறேன் என்றும் அதற்கான ஆவணம் எதுவும் போடவில்லை என்றால் சரியல்ல. சக்திவேல் மகள் விசேசத்திற்கு நான் பெங்களூர் போனேன். அவர் வீட்டில் இருந்தேன் என்றால் சரிதான். எனக்கு பார்வை நன்றாக தெரியும் படிக்க முடியும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் என் அருகில் இருப்பவர் சக்திவேல் என்றும் என் பக்கத்தில் உட்கார்ந்திருப்பவர் தான் பவுனாம்பாள் என்றால் சரிதான். அப்போது நான் கவனிக்கவில்லை. புகைப்படம் மற்றும் குறுந்தகடு வா.சா.ஆ4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பவுனாம்பாள் கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**1 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1990ல் அசல் வழக்கு 846/1990ல் எனக்கு எதிராக தாக்கல் செய்துள்ளதாக சொன்னேன் என்றும் அதில் 1 முதல் 7 பிரதிவாதிகள் அந்த வழக்கில் தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். அவர்களின் தந்தை தான் எனக்கு எதிராக வழக்கு போட்டார். அந்த வழக்கில் 1 முதல் 7 பிரதிவாதிகள் சாட்சி சொல்ல நீதிமன்றத்திற்கு வரவில்லை என்றால் சரிதான். மேல்முறையீடு தாக்கல் செய்தபோதும் அவர்கள் தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் அவர்கள் தரப்பினர்கள் இல்லை என்பதால் தீர்ப்பு அவர்களை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. டிகிரி நகலில் எங்களுக்கு 4½ செண்ட் தீர்ப்பாகி உள்ளது. அந்த வழக்கில் நான் பிரதிவாதி என்றால் சரிதான். அந்த வழக்கில் வழக்கு சொத்து எனக்கு தான் சொந்தம் என்று எதிர்கோருரிமை கோரவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஆதரவாக தான் தீர்ப்பு உள்ளது. இரண்டு வழக்குகளும் வாதி தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்று தள்ளுபடி செய்துவிட்டார்கள் என்றால்

அவர்கள் ஆஜராகவில்லை அதனால் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அந்த வழக்கு தள்ளுபடி செய்தார்கள் என்றும் எனக்கு உரிமை என்று தீர்மானம் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் 2ம் பிரதிவாதி ஓட்டு வீடு கட்டி குடியிருக்கிறார் என்றால் சரியல்ல. நான் தான் உடன் இருந்து வீடு கட்டினேன். சக்திவேல் வாடகைக்கு விட்டுவிட்டு பெங்களூரில் இருக்கிறேன். சக்திவேல் அப்பாவிற்கு பாகம் கொடுக்கவில்லை வீடு இல்லை என்று சொன்னதல் என் தந்தை தான் அந்த இடத்தில் கட்டிக்கொள் என்று அனுமதி கொடுத்தார். அது பாதி நெடுஞ்சாலையிலும் வாய்க்கால் புறம்போக்கில் பாதி உள்ளது. நான் எனது ஆட்சேபனையில் மேற்சொன்ன விவரத்தை சொன்னேனா என்றால் இல்லை. சொத்து எங்கள் மூவருக்கும் பாத்தியம் என்று காட்டுவதற்கு ஆவணம் தாக்கல்செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 1 முதல் 8 பிரதிவாதிகள் வாதிகளும அவர்கள் சொத்துகளை பாகம் பிரிக்க எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் நீதிமன்றம் சொல்வதை நாங்கள் கேட்கிறோம். தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/- R.Poornima,
Principal Sessions Judge,
Villupuram.